IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO:112/2017

**DEP OF WITNESS:**PW3 NAME: VijayaBarath Date:18-10-2022

**முதல் விசாரணை தொடர்ச்சி**

1.பட்டா எண் 166 சர்வே எண் 12எ/1 துரைசாமி கவுண்டர் மகன் சீனன் என்பவர்பெயரில் 1984 முதல் 2000 வரை உள்ள கை சிட்டாவின் சான்றிட்ட நகல் நீ.ம.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2.பட்டா எண் 166 சர்வே எண் 12எ/1 2000 முதல் 2009 வரை துரைசாமி கவுண்டர் மகன் சீனன் என்பவர்பெயரில் உள்ளது. 04.11.2009 முதல் பட்டா எண் 166 சர்வே எண் 12எ/1 ராஜாகவுண்டர் மகன் முனிரத்தினம் என்பவர் பெயரில் உள்ளது. கணிணி சிட்டாவின் சான்றிட்ட நகல் நீ.ம.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3.பட்டா எண் 166 சர்வே எண் 12எ/1 ராஜ கவுண்டர் மகன் முனிரத்தினம் என்பவர் பெயரில் 2011 முதல் 2016 வரை உள்ளது. 16.12.2013 முதல் பட்டா எண்.166 சர்வே எண்.12எ/1லிருந்து சர்வே எண்.12எ/1எ, சர்வே எண்.12எ/1பி மற்றும் சர்வே எண்.12எ/1சி ஆக பிரிக்கப்பட்டது. சர்வே எண்.12எ/1எ பரப்பு 70.5 ஏர்ஸ், பட்டா எண்.166 ராஜாகவுண்டர் மகன் முனிரத்தினம், சர்வே எண்.12எ/1பி பரப்பு 2.5 ஏர்ஸ் பட்டா எண்.850 ஆன்நத குழந்தைகள் மறுவாழ்வு மையம், ஸ்தாபகர் கிருபாகரன் என்ற பெயரில் உள்ளது மற்றும் சர்வே எண்.12எ/1சி பரப்பு 5 ஏர்ஸ், படடா எண்.851 சீனிவாசன் மகள் சரஸ்வதி என்பவர் பெயரில் உள்ளது. மேற்சொன்ன கணிணி சிட்டாவின் சான்றிட்ட நகல் நீ.ம.சா.ஆ.4ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4.பட்டா எண் 166 சர்வே எண் 12எ/1எ ராஜ கவுண்டர் மகன் முனிரத்தினம் மற்றும் சீனிவாசன் மகள் சரஸ்வதி என்பவர்கள் பெயரில் 2016 முதல் 2022 வரை உள்ள தமிழ்நிலம் சிட்டாவின் சான்றிட்ட நகல் நீ.ம.சா.ஆ.5ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5.அடங்கல் 2008 முதல் 2022 வரை கீழ்வரும் பெயர்களில் உள்ளது. பட்டா எண் 166 சர்வே எண் 12எ/1 2008 முதல் 2009 வரை சீனன் என்பவர் பெயரில் உள்ளது. 04.11.2009 முதல் 2013 வரை முனிரத்தினம் என்பவர் பெயரில் உள்ளது. 16.12.2013 முதல் 2016 வரை சர்வே எண். 12எ/1எ முனிரத்தினம் பெயரிலும் 12எ/1பி கிருபாகரன் பெயரிலும் 12எ/1சி சரஸ்வதி பெயரிலும் உள்ளது. 2017 முதல் 2022 வரை சர்வே எண்.12எ/1எ கூட்டு பட்டாவாக உள்ளது, சிட்டாவை பார்த்ததில் முனிரத்தினம் மற்றும் சரஸ்வதி பெயரில் உள்ளது. 12எ/1பி ஆனந்த குழந்தைகள் மறுவாழ்வு மையம் ஸ்தாபர் கிருபாகரன் என்ற பெயரில் உள்ளது. 12எ/1சி சரஸ்வதி பெயரில் உள்ளது. மேற்சொன்ன ஆவணங்களின் சான்றிட்ட நகல் நீ.ம.சா.ஆ.6ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6.அ பதிவேடு சர்வே எண்.12எ/1 பட்டா எண்.166 1984 முதல் 2013 வரை து,சீனன் பெயரில் உள்ளது. 16.12.2013 தேதியிலிருந்து 2017 வரை சர்வே எண்.166 12எ/1எ பட்டா எண்.166 முனிரத்தினம் பெயரில் உள்ளது. சர்வே எண்.12எ/1பி பட்டா

எண் 850 கிருபாகரன் பெயரில் உள்ளது. சர்வே எண்.12எ/1சி பட்டா எண்.851 சரஸ்வதி பெயரில் உள்ளது. சர்வே எண்.12எ/1எ பட்டா எண்.166 முனிரத்தினம் மற்றும் 1 நபர் பெயரில் உள்ளது. சர்வே எண்.12எ/1பி பட்டா எண்.850 ஆனந்த குழந்தைகள் மறுவாழ்வு மையம் ஸ்தாபகர் கிருபாகரன் பெயரில் உள்ளது. சர்வே எண்.12எ/1சி பட்டா எண்.851 சரஸ்வதி பெயரில் உள்ளது. மேற்சொன்ன ஆவணங்களின் சான்றிட்ட நகல் நீ.ம.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. அடங்கள் சிட்டா அ பதிவேடு ஆகியவைகள் சீனன் என்ற பெயரில் தான் உள்ளது. சீனிவாசன் என்ற பெயர் மேற்சொன்ன ஆவணங்களில் எந்த பதிவும் இல்லை.

**<u>2 வது மற்றும் 3வது பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1.எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்றது. நீதிமற்த்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையில் சர்வே எண்.12எ/1 உண்டான அடங்கல் சிட்டா அ பதிவேடு ஆகிய ஆவணங்கள் 1984லிருந்து 2022 வரை எடுத்துவர அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால் அடங்கல் ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் 2008 முதல் தான் உள்ளது.

2.கடந்த 12.09.2022 அன்று எனது முதல் விசாரணையின் போது அடங்கல் ஆவணத்தை 1984லிருந்து அலுவலகத்திலிருந்து எடுத்து வருவதாக தான் நேரம் கேட்டேன் என்றால் சரிதான். இன்று ஏன் எடுத்துவரவில்லை என்றால் எங்கள் அலவலகத்தின் பதிவறையில் அந்த ஆவணங்கள் இல்லை. எங்கள் அலவலகத்தில் ஆவணங்கள் இல்லாததற்காக எனது மேல்அதிகாரியிடம் ஏதேனும் கடிதம் பெற்றுவந்தேனா என்றால் இல்லை.

3.எனது மேல்அதிகாரியிடம் அலுவலக பதிறையில் அடங்கல் ஆவணம் 1984 முதல் 2008 வரை இல்லாதது சமபந்தமாக தகவல் அளித்தேன். இவ்வழக்கில் குடியாத்தம் வட்டாட்சியருக்கு அழைப்பாணை அனுபப்பட்டதின் பேரில் அவரின் ஆணைப்படி இவ்வழக்கிற்காக நான் தற்போது சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

4.எங்கள் அலவலகத்தில் பொதுவாக வருவாய் ஆவணங்கள் 15 வருடத்திற்குரிய ஆவணங்கள் எங்கள் பொறுப்பில் இருக்கும். அதற்கு 15 வருடத்திற்கு முன்பு உள்ள ஆவணங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தான் இருக்கும். நான் எடுத்துவந்துள்ள ஆவணங்களை வைத்து அதற்கு முன்பு சீனிவாசன் என்ற பெயரிலிருந்து சீனன் என்ற பெயருக்கு மாற்றப்பட்ட விவரங்களை கூற முடியுமா என்றால் முடியாது. சீனன் என்ற பெயருக்கு எந்த ஆண்டிலிருந்து எங்கள் ஆவணத்தில் பதிகிறது என்ற விவரத்தை என்னால் கூற முடியுமா என்றால் முடியாது.

5.அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள தேதிப்படி ஆவணங்களை எடுத்து வந்திருந்தால் தான் இவ்வழக்கிற்கு முழுமையான சாட்சியம் அளிக்கப்படும் என்றாலும் அப்படி எடுத்து வராததால் என்னுடைய சாட்சி இவ்வழக்கிற்காக ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள தேதிப்படி ஆவணங்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்தும் நான்இந்த நீதிமன்றத்திற்கு

எடுத்துவரவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் 15 வருடங்களுக்கு உண்டான ஆவணங்கள் மட்டும்தான் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருக்கும் என்பது தவறாகும் ஒரு ஆவணத்தின் தொடக்கத்தின் முதல்இருந்து வட்டாட்சியர் அலுவலகத்தில் இருக்கும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct.

Sd/.M.N.RAJANANDHIVARMASIVA,
DISTRICT MUNSIF